செ.வெ.எண்: 61/2021 நாள்:27.08.2021

**திருப்பூர் மாவட்டத்திற்கு இடியுடன் கூடிய கனமழை குறித்த அறிவிப்பு சென்னை மண்டல வானிலை ஆய்வு மையத்திலிருந்து வரப்பெற்றுள்ளதால் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார் !!!**

சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் 27.08.2021 அன்று பிற்பகல் 08.00 மணியளவில் விடுத்துள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் திருப்பூர், நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் வருகின்ற 28.08.2021 அன்று இடியுடன் கூடிய கனமழை முதல் மிக கனமழையும், 29.08.2021 மற்றும் 30.08.2021 ஆகிய இரு தினங்களில் கனமழை முதல் மிக அதி கனமழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகரில் ஜம்மனைப் பள்ளம், சங்கிலிப்பள்ளம் ஆகிய பகுதிகளிலும், திருப்பூர் மாவட்டத்தில் அமராவதி ஆறு, நொய்யல் ஆற்றின் கரையோரம் மற்றும் இதர தாழ்வான பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் பாதுகாப்பாக இருக்குமாறும், மழையின் அளவு அதிகளவு இருக்கும் காலங்களில் மழைநீர் வீட்டினுள் புகுந்திடும் அபாயம் இருந்தால் வீட்டை விட்டு வெளியேறி அருகில் உள்ள அரசு முகாம் கட்டிடங்களில் தங்கி கொள்வதுடன் அவ்வாறு வெளியேறும் போது வீட்டிலுள்ள கால்நடைகளையும் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்றிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இடியுடன் கூடிய கனமழை முதல் மிக அதி கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள (28.08.2021 முதல் 30.08.2021) நாட்களில் பொதுமக்கள் அவசியமின்றி வெளியில் வரவேண்டாம் எனவும், இடி பாதிப்பிற்கு அதிகளவில் உள்ளாகும் உயரமான கட்டிடங்கள் மற்றும் மரங்களின் அருகில் நிற்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், பொதுமக்களுக்கு உதவிடும் பொருட்டு மாவட்ட நிர்வாகத்தால் மீட்பு மற்றும் பேரிடர் தணிப்பிற்காக உரிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே,மேற்படி கனமழையினால் ஏதேனும் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவானால் உடனடியாக மாவட்ட கட்டுப்பாட்டு மைய எண்ணை (1077) தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, திருப்பூர் மாவட்டத்தில் வசித்து வரும் பொதுமக்கள் மேற்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி மழைக்காலத்தின் போது தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்..வினீத்.,இ.ஆ.ப அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**